## ஒத்திகை நிகழ்ச்சியை கலெக்டர் ஆய்வு



சுதந்திர தின விழாவை முன்னிட்டு ஊட்டி அரசு கலை கல்லூரி மைதானத்தில் நடந்த காவல் துறையினர் ஒத்திகை நிகழ்ச்சியை கலெக்டர் பவ்யா தண்ணீரு பார்வையிட்டார்.

### டாஸ்மாக் ஊழியர்கள்

# மதுக்கடைகளை பூட்டி பணி புறக்கணிப்பு போராட்டம்

**குடிமகன்கள் ஏமாற்றம்**



ஊட்டியில் டாஸ்மாக் ஊழியர்கள் பணி புறக்கணிப்பு போராட்டத்தை நேற்று துவக்கியுள்ளனர்.

**ஊட்டி, ஆக.15:** நீலகிரி மாவட்டத்தில் பணிநிரந்தம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முதல் டாஸ்மாக் ஊழியர்கள் பணி புறக்கணிப்பு போராட்டத்தை துவக்கி உள்ளனர்.

கடந்த 2003ம் ஆண்டு முதல் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக டாஸ்மாக் பணியில் சேர்ந்து கடந்த 23 ஆண்டுகளாக பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டு பணியாற்றி வரும் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள தவெக அரசு எவ்வித உத்தரவாதமும் சாதகமான பதிலும் தராமல் உள்ளது. எனவே டாஸ்மாக் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். டாஸ்மாக் கடைகளில் காலி அட்டை பெட்டிகளை பாதுகாத்தல், சரக்குகளை தனித்தனியாக பிரித்து வைக்க இடவசதி இல்லாமை, பணியாளர்களுக்கு கழிப்பறை வசதி இல்லாதது உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் உள்ளது. தற்போது ஆன்லைன் விற்பனை என பணிசுமையை கூட்டுவது மனித மாண்பிற்கு எதிரானது. எனவே புதிய திட்டங்களை அமலாக்கும் முன் பணியாளர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பதுடன், கடைகளில் அடிப்படை வசதிகளை முழுமையாக ஏற்படுத்த வேண்டும்.

காலி பாட்டில்கள் திரும்ப வாங்கும் திட்டத்தில் டாஸ்மாக் பணியாளர்களை பயன்படுத்துவதை உடனடியாக கைவிட்டு மாற்று முகமை மூலம் நிறைவேற்ற வேண்டும்.

கடை விற்பனை முடியும் இரவு 10 மணிக்கு மேல் கணக்குகளை சரி பார்க்க இரவு 11.30 மணிக்கு மேல் ஆகிறது. இரவு 8.30 மணிக்கு மேல் போக்குவரத்து வசதி இல்லை. நீலகிரி மாவட்டத்தில் பொது போக்குவரத்து வசதி இல்லாததால் வன விலங்குகள் தொல்லைக்கு நடுவே வாடகை வாகனங்களை பயன்படுத்த வேண்டிய சூழல் உள்ளது. இதனால் எங்களுடைய ஊதியம் இதற்கே சரியாக உள்ளது. எனவே பணி நேரத்தை இரவு 8 மணி வரை குறைத்து தர வேண்டும். பணி சுழற்சி முறையை அமல்படுத்தி பயோ மெட்ரிக் முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நீலகிரி மாவட்டத்தில் டாஸ்மாக் கடைகளில் பணியாற்றும் அனைத்து பணியாளர்கள் நேற்று முதல் பணி புறக்கணிப்பு போராட்டத்தை துவக்கி உள்ளனர்.

இதனால் நேற்று ஊட்டி உட்பட மாவட்டம் முழுவதும் பெரும்பாலான டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டிருந்தன. இதனை அறியாமல் 12 மணியளவில் கடைகளுக்கு முன் கூடிய குடிமகன்கள் கடைகள் திறக்கப்படாததால் மது பாட்டில்கள் கிடைக்காமல் ஏமாற்றத்திற்கு உள்ளாகினர்.

### தீட்டுக்கல் கிடங்கில்

# குப்பைகள் தேக்கத்தால் சுற்றுசூழல் பாதிப்பு



**ஊட்டி, ஆக. 15:** ஊட்டி தீட்டுக்கல் கிடங்கில் நுழைவுவாயில் வரை குப்பைகள் குவித்து வைக்கப்பட்டுள்ளதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது.

ஊட்டி நகரில் பிளாஸ்டிக் கழிவுகள், காய்கறி கழிவுகள் உள்ளிட்ட அனைத்து வகையான குப்பைகளும் நாள்தோறும் நகராட்சி மூலம் சேகரிக்கப்பட்டு வாகனங்கள் மூலம் தீட்டுக்கல் குப்பை கிடங்கிற்கு கொண்டு சென்று கொட்டப்படுகிறது.

அங்கு மக்கும், மக்காத குப்பைகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு பிளாஸ்டிக் உள்ளிட்ட மக்காத குப்பைகள் மறுசுழற்சி செய்யப்படுகிறது.

மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்கப்படுகிறது. நாள் ஒன்றிற்கு சுமார் 30 டன் அளவிற்கு குப்பைகள் கொட்டப்படுகிறது. இந்நிலையில் கடந்த மே மாதம் இக்குப்பை கிடங்கில் உள்ள பிளாஸ்டிக் மறுசுழற்சி செய்யும் மையத்தில் தீ விபத்து ஏற்பட்டு முழுமையாக எரிந்து நாசமானது. இந்த மையம் இன்னும் சீரமைக்கப்படாததாலும், தரம் பிரிக்கும் பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததாலும் நாள்தோறும் சேகரமாகும் குப்பைகளை பிரித்து பிளாஸ்டிக் மறு சுழற்சி செய்யும் பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. இதனால் குப்பைகள் இவ்வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது.

தற்போது நுழைவுவாயில் பகுதி வரை குப்பைகள் கொட்டப்பட்ட நிலையில் குப்பை கிடங்கு முழுமையாக நிரம்பி டன் கணக்கில் மலைபோல் குப்பைகள் தேங்கி துர்நாற்றம் வீசி வருகிறது. இந்த குப்பை கிடங்கு வனத்தை ஒட்டி அமைந்துள்ள நிலையில் தரம் பிரிக்கப்படாத பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொள்ளும் பட்சத்தில் வனவிலங்குகள் உயிரிழக்க கூடிய அபாயம் நீடிக்கிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சுற்றுசூழல் பாதுகாப்பு கருதி தீட்டுக்கல் குப்பை கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை அகற்றி விட்டு அந்த நிலத்தை வனத்துறை வசம் ஒப்படைக்க வேண்டும் என பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### குன்னூர்-கோத்தகிரி சாலையில்

# புதிய நீதிமன்ற வளாக இடத்தை நீதிபதிகள் ஆய்வு



குன்னூரில் புதிதாக நீதிமன்றங்கள் அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்ட இடத்தை நீதிபதிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

**குன்னூர், ஆக.15:** நீலகிரி மாவட்டம் குன்னூர்-கோத்தகிரி சாலையில் அமைந்துள்ள பட்டு பூச்சி வளர்ப்பு பண்ணை அருகே, நீதித்துறை சார்பில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த நிலத்தை குன்னூர் சார்பு நீதிமன்ற நீதிபதி மேகலாமைதிலி, விரைவு நீதிமன்ற நீதிபதி கீதா மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி இமா கீர்த்தி ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வின் போது, முதற்கட்ட நடவடிக்கையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்ற வளாக நிலப்பகுதியில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் இணைந்து மரக்கன்றுகளை நட்டனர். ஆய்வுக்குப் பின் பேசிய நீதிபதிகள், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த நிலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் எனத் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள், காவல்துறை அதிகாரிகள், வனத்துறையினர் மற்றும் நீதிமன்ற பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.









## சுவாதீன அறிவிப்பு

### எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிட்.

**CIN: U67100MH2007PLC174759**

ரீடெய்ல் மைய & பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் இல்லம், சிஎஸ்டி சாலை தொலைவு, கலீனா, மும்பை 400098

பிற்சேர்க்கை IV [விதி- 8(1)] சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)

இவ்வாறிருக்க, அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் (சட்டம்), 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் (விதி 3) உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கோரிக்கை அறிவிப்பு வழங்கி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

அதற்குப் பிறகு கடனீட்டு கடன்தாரர் சர்ஃபாசி சட்டம், 2002 இன் பிரிவு 5 கீழ் செய்து கொண்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தத்தினை பின்பற்றி இஏஆர்சி பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் சொந்த/அதன் திறனில் செயல்படும் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு நிதிச் சொத்துகளை உரிமை ஒதுக்கீடு செய்துள்ளது. இஏஆர்சி ஆனது கடன்தாரரால் பெறப்பட்ட நிதி உதவி தொடர்பான கீழ்க்காணும் கடனீட்டு உரிமைகள், உத்திரவாதங்கள், அடமானங்கள் ஆகியவற்றுடன் நிதிச் சொத்துகள் தொடர்பான பிஎஃஎல் இன் அனைத்து உரிமங்கள், உரிமைப்பத்திரம் மற்றும் உரிமைகள் ஆனது இஏஆர்சி–க்கு வந்தடைந்துள்ளன. மேலும் இஏஆர்சி ஆனது கடனீட்டு கடனீந்தோராக அதன் அனைத்து உரிமைகளை செயல்படுத்துகிறது.

கடன்தாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதைத் தொடர்ந்து, இதன்மூலம் கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்ட எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு (4) உடன் கடனீட்டு சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 இன்படி குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்தையும் சுவாதீனம் செய்துள்ளார்

| வ. எண். | கடன் கணக்கு எண்& கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர் (கள்) பெயர் | கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை | பொறுப்பாட்சி விவரங்கள் | சுவாதீன நாள் | அடையாளப்பூர்வ/ கையக சுவாதீனம் |
|---|---|---|---|---|---|
| 1 | கடன் கணக்கு எண்: IL10759204 1) திரு. துளசிமணி அண்ணாதுரை, 2) திரு. அண்ணாதுரை மோகனா (உப-கடன்தாரர்), 3) திரு. பாப்பல் (உப-கடன்தாரர்), | 26-05-2026 & Rs.4,77,799/- | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-474 மற்றும் M/s. IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்., | 11.08.2026 | அடையாளப்பூர்வ சுவாதீனம் |
| | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: மறு சர்வே எண் 141/3–இல் அடங்கியுள்ள 860 சதுர அடி பரப்பளவுள்ள நிலப்பகுதி, இடம் எண் 69, மொடக்குறிச்சி 'ஏ' கிராமம், மொடக்குறிச்சி தாலுகா, அவல் பூந்துறை துணைப் பதிவாளர், ஈரோடு பதிவு மாவட்டம், HSD பட்டா எண் 3/1427 இதன் வடக்கில் எல்லைகள்: சாலை, தெற்கில்: இடம் எண் 70, கிழக்கில்: காலி நிலம், மேற்கில்: இடம் எண் 68. | | | | |
| 2 | கடன் கணக்கு எண்: IL10285677 1) திரு.செல்வராஜ் ("கடன்தாரர்") 2) திருமதி.ஜோதிமணி (உப-கடன்தாரர்), | 28-05-2026 & Rs.6,20,099.22 | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-474 மற்றும் M/s. IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்., | 11.08.2026 | அடையாளப்பூர்வ சுவாதீனம் |
| | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், தாராபுரம் துணைப் பதிவு வட்டம், தாராபுரம் வட்டம், சித்தாரா உத்தன்பாளையம் கிராமம், புதிய ஒதுக்கீட்டு எண் 86/2, காளைப் பகுதி, ஹெக்டேர் 1.45.0, இதில் 858 சதுர அடி பரப்பளவு மற்றும் இதில் வரிவிதிப்பு எண் 2768, கதவு எண் 144/40, வீட்டு வகை சொத்து, ஒதுக்கீட்டு எண் 86/1, காளைப் பகுதி கிழக்கு, மனை எண் 6 தெற்கு, தென்வாடல் சாலை மேற்கு, மனை எண் 8 வடக்கு ஆகியவற்றால் சூழப்பட்டது | | | | |
| 3 | கடன் கணக்கு எண்: IL10575754 1) திரு. நடராயன் செல்வராஜ் ("கடன்தாரர்") 2) திருமதி.முருகேஸ்வரி (உப-கடன்தாரர்), | 27-05-2026 & Rs.5,70,389.97 | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-474 மற்றும் M/s. IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்., | 11.08.2026 | அடையாளப்பூர்வ சுவாதீனம் |
| | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: திருப்பூர் மாவட்டம், திருப்பூர் துணைப் பதிவாளர் அலுவலகம், தாராபுரம் பதிவு மாவட்டம், தாராபுரம் தாலுகா, அல்லம்பாளையம் கிராமம், இடம் எண் 91–இல் அமைந்துள்ள, 861 சதுர அடி அல்லது 80 சதுர மீட்டர் பரப்பளவுள்ள, மறு சர்வே எண் 1482/1a–இல் அடங்கியுள்ள நிலத்தின் அனைத்துப் பகுதிகளும், வடக்கில் சாலை, தெற்கில் இடம் எண் 81, கிழக்கில் இடம் எண் 90, மேற்கில் இடம் எண் 92 ஆகியவற்றால் எல்லையிடப்பட்டது. | | | | |
| 4 | கடன் கணக்கு எண்: IL10581824 1) திரு.பாலணி கலியப்பன் ("கடன்தாரர்") 2) திருமதி. அழகம்மாள் கலியப்பன் (உப-கடன்தாரர்), | 27-05-2026 & Rs.6,42,041.16 | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-474 மற்றும் M/s. IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்., | 11.08.2026 | அடையாளப்பூர்வ சுவாதீனம் |
| | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: திருப்பூர் மாவட்டம், திருப்பூர் சிறப்புப் பதிவு அலுவலகம் (SRO), தாராபுரம் துணைப் பதிவு மாவட்டம், தாராபுரம் தாலுகா, மணக்கடவா கிராமம், இடம் எண் 66–இல் அமைந்துள்ள, மறு கணக்கெடுப்பு எண் 381/2–இல் அடங்கியுள்ள 861 சதுர அடி பரப்பளவுள்ள நிலப்பகுதி முழுவதும், வடக்கில் சாலை, தெற்கில் இடம் எண் 61, கிழக்கில் இடம் எண் 67, மேற்கில் இடம் எண் 65 ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. | | | | |
| 6 | கடன் கணக்கு எண்: LCMBSTH0000007126 திரு. V. சிவகுமார் ("கடன்தாரர்") திருமதி. T. பத்மப்ரியா (உப-கடன்தாரர்), | 09.05.2024 & Rs. 67,08,231.98 | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-401 & M/s.எடெல்வீஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் | 10.08.2026 | அடையாளப்பூர்வ சுவாதீனம் |
| | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: சர்வே எண் 233/1, கதவு எண் 24, பழைய எண் 48–4K, மனை எண் 45, கஸ்தூரிபாளையம் எஸ்.ஆர்.கே.வி (அஞ்சல் அலுவலகம்), பெரியநாயக்கன்பாளையம் கிராமம், கோயம்புத்தூர் 641020 ஆகிய முகவரிகளைக் கொண்ட சொத்தின் ஒரு பகுதி. மொத்த நிலப்பரப்பு 2088 சதுர அடி. இதன் எல்லைகள்: கிழக்கு: ராஜசேகருக்குச் சொந்தமான சொத்து. மேற்கு: 40 அடி அகல தெற்கு–வடக்கு லேஅவுட் சாலை. வடக்கு: 30 அடி அகல கிழக்கு–மேற்கு லேஅவுட் சாலை. தெற்கு: கண்ணியனுக்குச் சொந்தமான சொத்து. | | | | |
| 7 | கடன் கணக்கு எண்: LCMBSTH0000007984 1) R. காந்திலால் ("கடன்தாரர்") 2) திருமதி. K மீனா குமாரி (உப-கடன்தாரர்), | 23.08.2024 & Rs. 61,31,715.96 | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-401 & M/s.எடெல்வீஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் | 10.08.2026 | அடையாளப்பூர்வ சுவாதீனம் |
| | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் துணைப் பதிவு மாவட்டம், சிக்கடசம்பாளையம் கிராமம், பட்டா எண் 73, சர்வே எண் 144/1A–இல் உள்ள 2.80 ஏக்கர் பரப்பளவு கொண்ட, வீட்டு மனைகளாக மாற்றப்பட்ட அனைத்து அசையா சொத்துக்களும்; இந்த மனையில் எண்கள் 266 மற்றும் 267 உள்ளன. மேலும் இது பின்வருமாறு எல்லையிடப்பட்டுள்ளது: கிழக்கு: சர்வே எண் 119–இல் அமைந்துள்ள நிலம், மேற்கு: எண்கள் 268 மற்றும் 269 கொண்ட மனை, வடக்கு: 20 அடி கிழக்கு–மேற்கு லேஅவுட் சாலை, தெற்கு: 20 அடி கிழக்கு–மேற்கு லேஅவுட் சாலை, மற்றும் இதன் அளவுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கு–மேற்காக: 41.0 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கு–மேற்காக: 43.0 அடி, கிழக்குப் பக்கத்தில் தெற்கு–வடக்காக – 120.0 அடி, மேற்குப் பக்கத்தில் தெற்கு–வடக்காக: 100.6 அடி. இந்த தெற்குப் பகுதியில் உள்ள 4676 சதுர அடி நிலம். பகுதி எண் 267, பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: பகுதி எண் 266–க்கு வடக்கே, எஸ்.எஃப். எண் 119–இல் அமைந்துள்ள பகுதிக்குக் கிழக்கே, பகுதி எண்கள் 268 மற்றும் 269–க்கு மேற்கே மற்றும் 20 அடி அகலமுள்ள கிழக்கு–மேற்குச் சாலைக்குத் தெற்கே. இதன் நடுவில், 2338 சதுர அடி அல்லது 05 சென்ட் மற்றும் 158 சதுர அடி நிலம், அதன் மீது கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து உபகரணங்களுடன், சொத்திற்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் முழு உரிமையுடன் உள்ளது. இந்தச் சொத்து சிக்கரம்பாளையம் கிராம பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது. | | | | |
| 11 | கடன் கணக்கு எண்: IL10875229 1) திரு. ஜீவானந்தம் காளிமுத்து ("கடன்தாரர்") 2) திருமதி. சௌந்தர்யா சல்லிவீரன்(உப-கடன்தாரர்), | 28.05.2026 & Rs. 4,93,142.20 | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-474 மற்றும் M/s. IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்., | 12.08.2026 | கையக சுவாதீனம் |
| | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்:கோயம்புத்தூர் தெற்குப் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்பதிவு அலுவலகம், பொள்ளாச்சி தாலுகா, திப்பம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள, பட்டா எண் 370–இல் உள்ள சைட் எண் 257–இல் அடங்கிய, 80 சதுர மீட்டர் பரப்பளவுள்ள, சர்வே எண் 182/B1A1, 183/B1, 183/B2A, 184/1 ஆகிய நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்துப் பகுதிகளும், கிழக்கில் லேஅவுட் சாலை, மேற்கில் சைட் எண் 248, வடக்கில் சைட் எண் 258, தெற்கில் சைட் எண் 256 ஆகியவற்றால் எல்லையிடப்பட்டது. | | | | |
| 12 | கடன் கணக்கு எண்: SHLHERDE0000142 1) திரு. கணேசன் G P ("கடன்தாரர்") 2) திருமதி. சரஸ்வதி (உப-கடன்தாரர்), | 09.09.2024 & Rs. 6,81,341/- | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-473 மற்றும் M/s. ஸ்ரீராம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட், (தற்போது M/s. ட்ரூஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்) | 10.08.2026 | கையக சுவாதீனம் |
| | கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: கோபிசெட்டி பாளையம் பதிவு மாவட்டம், ஜாயின்ட் 2 எஸ்.ஆர்.டி, வெள்ளாலபாளையம் கிராமம், பழைய எஸ்.எஃப். எண்.30/9, புதிய எஸ்.எஃப். எண்.30/9a1 மனைப்பிரிவு, "பாவலமலை நகர்" எனப் பெயரிடப்பட்ட வீடு எண்.02, கிழக்குப் பகுதி, புதிய எஸ்.எஃப். எண்.30/10b1, 835¼ சதுர அடி பரப்பளவுள்ள, கட்டிடத்துடன் கூடிய நிலம் பின்வருவனவற்றால் சூழப்பட்டுள்ளது: மேற்கு: 9 மீட்டர் அகலமுள்ள கிழக்கு–மேற்கு மனைப்பிரிவு சாலை, கிழக்கு: வீடு எண்.02–இன் மேற்குப் பகுதியின் ஒரு பகுதி, வடக்கு: ஆர்.எஸ். எண்.30/1, தெற்கு: மனை எண்.348. | | | | |

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. கடன்தாரருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் வசூலுக்கு உட்படும்.

இடம்: தமிழ்நாடு
தேதி: 15.08.2026

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

Edelweiss Asset Reconstruction

## க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரீனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா–411014. கிளை அலுவலகம் அலகு: எண்.274, 2 ஆவது தளம், காந்தி ரோடு, லக்ஷ்மிபுரம், மேற்கு தாம்பரம், சென்னை–600045, தமிழ்நாடு.

**மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை**

**பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.**

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

நிரல் (J) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக 31.08.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

| வ. எண். | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B) | சுவாதீன தன்மை (C) | சொத்தின் விவரம் (D) | நிர்ணய விலை (E) | முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F) | முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G) | ஏல உயர்வுத் தொகை (H) | சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I) | ஏலத் தேதி மற்றும் நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | கடன் எண் LAP0610200000005040723 மணிகண்டன் பழனிசாமி (கடன்தாரர்), சரஸ்வதி பழனிசாமி (உப கடன்தாரர்) பழனிசாமி மாசாணி போயன் | அறிவிப்பு தேதி: 08.08.2025 08.08.2025 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.7,99,379/– (ரூபாய் ஏழு லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து முந்நூற்று எழுபத்தொன்பது மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு கூடுதலான 19.35% வட்டி. | கையக | கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை துணை பதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், கோட்டூர் கிராமம், S.F.No.38/A1 , ராஜீவ் காந்தி நகர், மனை எண்.18 இல் உள்ள 48 ச.மீட்டர் பரப்பளவு உள்ள சொத்தின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கில்: கிழக்கு மேற்கு தெரு, கிழக்கில்: தெற்கு வடக்கு தெரு, தெற்கில்: மனை எண்.19, மேற்கில்: மனை எண்.33. | Rs. 760586.00/- (ரூபாய் ஏழு லட்சத்து அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தாறு மட்டும்) | Rs. 76058.60/- (ரூபாய் எழுபத்தாறாயிரத்து ஐம்பத்தெட்டு மற்றும் பைசா அறுபது மட்டும்) | 28-08-2026 Before 5 PM | 10,000/- | 24-08-2026 (11AM – 4PM) | 31-08-2026 (11 AM- 2PM) | எதுவுமில்லை |
| 4 | கடன் எண் HL00118100000005011923 முகமது அலி (கடன்தாரர்), K M ஜமீலா (உப கடன்தாரர்) | அறிவிப்பு தேதி: 11.12.2025 மொத்த நிலுவைத் தொகை: 11.12.2025 தேதியின்படி ரூ.4,04,982/– (ரூபாய் நான்கு லட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து இரண்டு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு கூடுதலான 15.60% வட்டி. | கையக | கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் துணைப் பதிவு மாவட்டம், அவிநாசி தாலுகா, கனூர் கிராமத்தில், பட்டா எண் 1220–இன் படி, S.F.No.118/3a–இல் 0.83 ஏக்கர், S.F.No.118/3b–இல் 0.83 ஏக்கர், S.F.No.120/24–இல் 0.61 ஏக்கர், S.F.No.120/2b–இல் 0.61 ஏக்கர், மற்றும் பட்டா எண் 648–இன் படி S.F.No.121/1–இல் உள்ள 1.37 ஏக்கர். இந்த 1.36 ஏக்கரில் S.F.No.121/2a–இல் 1.29 ஏக்கர், பட்டா எண் 1483–இன் படி S.F.No.121/28–இல் உள்ள 0.66 ஏக்கரில் 74 சதுர அடி, ஆக மொத்தம் 5.53 ஏக்கர் 74 சதுர அடி நிலத்தில், 5.52 ஏக்கர் நிலங்கள் கோயம்புத்தூர் நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரால் DTCP N0.437/2018, தேதி 19.09.2018 மற்றும் கனூர் ஊராட்சி செயல் அலுவலரால் Na.Ka.No.1380/2017/A2, தேதி 08.10.2018 அன்று மனைப்பிரிவுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டு "வெற்றி அவென்யூ" எனப் பெயரிடப்பட்ட மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டு உள்ளது. அதில் பிளாக் எண் F–இல், இனம் எண் 1:– (விற்பனைப் பத்திர ஆவணம் எண். 631/2023–இன் படி) பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள, மனை எண் 27–இன் மேற்குப் பகுதி, 667.5 சதுர அடி பரப்பளவு உள்ளது. அதன் மீது கட்டப்படவுள்ள கட்டிட கட்டுமானத்துடன் எல்லைகள்: வடக்கில்: 23 அடி கிழக்கு–மேற்கு சாலை, தெற்கில்: மனை எண். 10, கிழக்கில்: திருமதி. நாகவள்ளியின் மீதமுள்ள சொத்து, மேற்கில்: மனை எண் 26, அளவீடு: வடக்கு–தெற்காக கிழக்குப் பக்கத்தில். 40 அடி, வடக்கு–தெற்காக மேற்குப் பக்கத்தில். 40.3 அடி, கிழக்கு–மேற்காக வடக்கு பக்கத்தில் 17.5 அடி, கிழக்கு–மேற்காக தெற்குப் பக்கத்தில்: 15.75 அடி. பாதை, வண்டிப்பாதை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட மற்ற அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தும் உரிமையுடன் உள்ள சொத்து. இந்தச் சொத்து புதிய துணைப் பிரிவு எண் 121/2a1a1a1–ல் அமைந்துள்ளது. இனம் எண்.2:– (விற்பனைப் பத்திர ஆவணம் எண். 8.0.1.2..../2023 இன் படி) மனை எண் 27–இன் கிழக்குப் பகுதி, 584.35 சதுர அடி பரப்பளவு கொண்டது, அத்துடன் அதில் கட்டப்படவுள்ள கட்டிட கட்டுமானம் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கில்: 23 அடி கிழக்கு–மேற்கு சாலை, தெற்கில்: மனை எண் 10, கிழக்கில்: S.F.No.117, மேற்கில்: முகமது அலிக்குச் சொந்தமான இனம் எண்.1 சொத்து. அளவீடு: வடக்கு–தெற்காக இருபுறமும்: 40.3 அடி. கிழக்கு–மேற்காக வடக்கு பக்கத்தில்: 15.5 அடி, கிழக்கு–மேற்காக தெற்குப் பக்கத்தில்: 13.5 அடி. | Rs. 299704.00/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து எழுநூற்று நான்கு மட்டும்) | Rs. 29970.40/- (ரூபாய் இருபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபது மற்றும் பைசா நாற்பது மட்டும்) | 28-08-2026 Before 5 PM | 10,000/- | 24-08-2026 (11AM – 4PM) | 31-08-2026 (11 AM- 2PM) | எதுவுமில்லை |
| 5 | கடன் எண் HM0118H17100029 R கலைவாணி (கடன்தாரர்), R கலைவாணி (உப-கடன்தாரர்) சாந்தினி மணிவண்ணன் (உப-கடன்தாரர்) | அறிவிப்பு தேதி: 09.04.2025 மொத்த நிலுவைத் தொகை: 09.04.2025 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.4,06,046/– (ரூபாய் நான்கு லட்சத்து ஆறாயிரத்து நாற்பத்தாறு மட்டும்) மற்றும் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு கூடுதலான 14.9% வட்டி | கையக | திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், பல்லடம் வட்டம், காரைபுதூர் கிராமம், S.F.No.534/2b இல் புஞ்சை ஏக்கர் 4.00 பரப்பளவு உள்ள நிலம் பின்வரும் எல்லைகளை உடையது. மேற்கில்: ராமசாமி கவுண்டர் மற்றும் பிறரின் சொத்து, கிழக்கில்: குமாரசாமி கவுண்டருக்குச் சொந்தமான சொத்து, தெற்கில்: ராமசாமி கவுண்டரின் சொத்து, வடக்கில்: காளியப்ப கவுண்டருக்குச் சொந்தமான சொத்து மற்றும் புறம்போக்கு இட்டேரி. | Rs. 773092.00/- (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து தொன்னூற்று இரண்டு மட்டும்) | Rs. 77309.20/- (ரூபாய் எழுபத்தேழாயிரத்து முந்நூற்று ஒன்பது மற்றும் பைசா இருபது மட்டும்) | 28-08-2026 Before 5 PM | 28-08-2026 Before 5 PM | 24-08-2026 (11AM – 4PM) | 31-08-2026 (11 AM- 2PM) | GHFL கடன்தாரருக்கு எதிராக SCRF சென்னையில் வழக்கு எண். FA463/2025– இன்படி நுகர்வோர் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருக்கிறது. |
| 7 | கடன் எண் LAP0610200000005062740 சிவசக்தி பழனிசாமி (கடன்தாரர்), ராணி சிவசக்தி (உப கடன்தாரர்) | அறிவிப்பு தேதி: 11.02.2026 மொத்த நிலுவைத் தொகை: 11.02.2026 தேதியின்படி ரூ.6,70,248 /–(ரூபாய் ஆறு லட்சத்து எழுபதாயிரத்து இருநூற்று நாற்பத்தெட்டு மட்டும்) மற்றும் திருப்பிச் செலுத்தும் ஆண்டொன்றுக்கு கூடுதலான 18.35% வட்டி. | கையக | திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி, துணைப் பதிவு தாலுகா. உருக்கட்டி கிராமம், எல்லைகள்: வடக்கில்: தெற்கு சாலை, கிழக்கில்: பழனிச்சாமி வீடு, தெற்கில்: கீழ்மேல் தெரு, மேற்கில்: கன்னிச்சாமிவீடு, இதனிடையே அளவீடு: , வடக்குப் பக்கத்தில்: 11.8 மீட்டர் நீளம், தெற்கு பக்கத்தில்: 12.6 மீட்டர், தெற்குப் பக்கத்தில், 5.8 மீட்டர் நீளம், தெற்குப் பக்கத்தில் 6.8 மீட்டர் நீளம், 77 சதுர மீட்டர் பரப்பளவில் 2–சென்ட் நிலம் உள்ளது. இந்த மனை நிலத்துக்கு வழக்கப்படி உள்ள பாதை, நடைபாதை மனை நிலத்தின் எண். 41c/Pa. புதிய மனை M. 521/14. | Rs. 717400.00/- (ரூபாய் ஏழு லட்சத்து பதினேழாயிரத்து நானூறு மட்டும்) | Rs. 71740.00/- ரூபாய் எழுபத்து ஓராயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) | 28-08-2026 Before 5 PM | 10,000/- | 24-08-2026 (11AM – 4PM) | 31-08-2026 (11 AM- 2PM) | எதுவுமில்லை |

**ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், சூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, **தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222** மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ நிரல் (G) இல் 28.08.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை கிளை முகவரி : எண்.274, 2 ஆவது தளம், காந்தி ரோடு, லக்ஷ்மிபுரம், மேற்கு தாம்பரம், சென்னை–600045, தமிழ்நாடு, கைபேசி எண். +91 9597907666. மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

**கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.**

*உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.*

நாள்: 15.08.2026, இடம்: தமிழ்நாடு — ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்